பிரதமர், அதிபர் வோலோடிமிர் ஜெலன்ஸ்கி அவர்களுடன் தொலைபேசியில் உரையாடினார் (நவம்பர் 09, 2026)

பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள், இன்று உக்ரைன் அதிபர் மாண்புமிகு திரு. வோலோடிமிர் ஜெலன்ஸ்கி அவர்களுடன் தொலைபேசி வாயிலாக உரையாடினார்.

2. தொடர்ந்து நடைபெற்று வரும் மோதல் தொடர்பான அண்மைக்கால நிகழ்வுகள் குறித்து அதிபர் ஜெலன்ஸ்கி தனது பார்வையைப் பகிர்ந்து கொண்டார்.

3. இந்தியாவின் மனித-மைய அணுகுமுறையை மீண்டும் உறுதிப்படுத்திய பிரதமர், பேச்சுவார்த்தை மற்றும் இராஜதந்திரம் மூலம் மோதலைத் தீர்க்க வேண்டும் என்ற இந்தியாவின் நிலையான நிலைப்பாட்டை மீண்டும் வலியுறுத்தினார். மோதலை அமைதியான முறையில் தீர்ப்பதை நோக்கமாகக் கொண்ட அனைத்து முயற்சிகளுக்கும் பங்களிக்க இந்தியாவின் தயார்நிலையை அவர் தெரிவித்தார்.

4. இரு நாட்டு மக்களுக்கும் பரஸ்பர நன்மையளிக்கும் வகையில், இந்தியா-உக்ரைன் இடையிலான இருதரப்பு ஒத்துழைப்பை பல்வேறு துறைகளில் மேலும் வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் குறித்தும் அந்த இரு தலைவர்களும் விவாதித்தனர்.

புது தில்லி

நவம்பர் 09, 2026